பூந்தளிர் அமர் சித்திரக்கதை

No. 31

COMICS PDF TIMES

மகாபாரதம் - 6

AMAR CHITRA KATHA

11 KRISHNA
12 SHAKUNTALA
13 THE PANDAVA PRINCES
14 SAVITRI
15 RAMA
16 NALA DAMAYANTI
17 HARISCHANDRA
18 THE SONS OF RAMA
19 HANUMAN
20 MAHABHARATA
21 CHANAKYA
22 BUDDHA
23 SHIVAJI
24 RANA PRATAP
25 PRITHVIRAJ CHAUHAN
26 KARNA
27 KACHA
28 VIKRAMADITYA
29 SHIVA PARVATI
30 VASAVADATTA
31 SUDAMA
32 GURU GOBIND SINGH
33 HARSHA
34 BHEESHMA
35 ABHIMANYU
36 MIRABAI
37 ASHOKA
38 PRAHLAD
39 PANCHATANTRA I
40 TANAJI
41 CHHATRASAL
42 PARASHURAMA
43 BANDA BAHADUR
44 PADMINI
45 JATAKA TALES I
46 VALMIKI
47 GURU NANAK
48 TARABAI
49 RANJIT SINGH
50 RAM SHASTRI
51 RANI OF JHANSI
52 ULOOPI
53 BAJI RAO I
54 CHAND BIBI
55 KABIR
56 SHER SHAH
57 DRONA
58 SURYA
59 URVASHI
60 ADI SHANKARA
61 GHATOTKACHA
62 TULSIDAS
63 SUKANYA
64 DURGADAS
65 ANIRUDDHA
66 ZARATHUSHTRA
67 THE LORD OF LANKA
68 TUKARAM
69 AGASTYA
70 VASANTASENA
71 INDRA & SHACHI
72 DRAUPADI
73 SUBHADRA
74 AHILYABAI HOLKAR
75 TANSEN
76 SUNDARI
77 SUBHAS CHANDRA BOSE
78 SHRIDATTA
79 JATAKA TALES II
80 VISHWAMITRA
81 THE SYAMANTAKA GEM
82 MAHAVIRA
83 VIKRAMADITYA S THRONE
84 BAPPA RAWAL
85 AYYAPPAN
86 ANANDA MATH
87 BIRBAL THE JUST
88 GANGA
89 GANESHA
90 CHAITANYA MAHAPRABHU
91 HITOPADESHA I
92 SAKSHI GOPAL
93 KANNAGI
94 NARSINH MEHTA
95 JASMA OF THE ODES
96 SHARAN KAUR
97 CHANDRAHASA
98 PUNDALIK & SAKHU
99 RAJ SINGH
100 PURUSHOTTAM DEV & PADMAVATI
101 VALI
102 NAGANANDA
103 MALAVIKA
104 RANI DURGAVATI
105 DASHARATHA
106 RANA SANGA
107 PRADYUMNA
108 VIDYASAGAR
109 TACHCHOLI OTHENAN
110 SULTANA RAZIA

Acquaint your children with their cultural heritage

111 SATI & SHIVA
112 KRISHNA & RUKMINI
113 RAJA BHOJA
114 GURU TEGH BAHADUR
115 PAREEKSHIT
116 KADAMBARI
117 DHRUVA & ASHTAVAKRA
118 KING KUSHA
119 RAJA RAJA CHOLA
120 DAYANANDA
121 VEER DHAVAL
122 ANCESTORS OF RAMA
123 EKANATH
124 SATWANT KAUR
125 UDAYANA
126 JATAKA TALES III
127 THE GITA
128 VEER HAMMIR
129 MALATI & MADHAVA
130 GARUDA
131 BIRBAL THE WISE
132 RANAK DEVI
133 MARYADA RAMA
134 BABUR
135 DEVI CHOUDHURANI
136 RABINDRANATH TAGORE
137 SOORDAS
138 PANCHATANTRA II
139 PRINCE HRITADHWAJA
140 HUMAYUN
141 PRABHAVATI
142 CHANDRA SHEKHAR AZAD
143 A BAG OF GOLD COINS
144 PURANDRA DASA
145 BHANUMATI
146 VIVEKANANDA
147 KRISHNA & JARASANDHA
148 NOOR JAHAN
149 ELEPHANTA
150 TALES OF NARADA
151 KRISHNADEVA RAYA
152 BIRBAL THE WITTY
153 MADHVACHARYA
154 CHANDRA GUPTA MAURYA
155 JNANESHWAR
156 BAGHA JATIN
157 MANONMANI
158 ANGULIMALA
159 THE TIGER AND THE WOODPECKER
160 TALES OF VISHNU
161 AMRAPALI
162 YAYATI
163 PANCHATANTRA III
164 TALES OF SHIVA
165 KING SHALIVAHANA
166 THE RANI OF KITTUR
167 KRISHNA & NARAKASURA
168 THE MAGIC GROVE
169 LACHIT BARPHUKAN
170 INDRA AND VRITRA
171 AMAR SINGH RATHOR
172 KRISHNA & THE FALSE VASUDEVA
173 KOCHUNNI
174 TALES OF YUDHISHTHIRA
175 HARI SINGH NALWA
176 TALES OF DURGA
177 KRISHNA AND SHISHUPALA
178 RAMAN OF TENALI
179 PAURAVA AND ALEXANDER
180 INDRA AND SHIBIRAJA
181 GURU HAR GOBIND
182 THE BATTLE FOR SRINAGAR
183 RANA KUMBHA
184 ARUNI AND UTTANKA
185 HITOPADESHA II
186 TIRUPPAN & KANAKADASA
187 TIPU SULTAN
188 DR AMBEDKAR
189 THUGSEN
190 KANNAPPA
191 THE KING IN A PARROT'S BODY
192 RANADHIRA
193 KAPALA KUNDALA
194 GOPAL & THE COWHERD
195 JATAKA TALES IV
196 HOTHAL
197 THE RAINBOW PRINCE
198 TALES OF ARJUNA
199 CHANDRALALAT
200 AKBAR

Available at
PAI & CO.
Ernakulam, Calicut, Madras, Trivandrum
And all other Leading Book Sellers

COMICS PDF TIMES

MAHABHARATA-6

© IBH Publishers Pvt. Ltd 1980. The Tamil Edition published by arrangement with IBH Publishers Pvt. Ltd., Mahalaxmi Chambers, 22, Bhulabhai Desai Road, Bombay-400 026.

Editor: **Anant Pai**

Script: **Kamala Chandrakant & T. M. P. Nedungadi**

Art works: **Dilip Kadam**

மகாபாரதம் - 6

கர்ணனின் வருகை



COMICS PDF TIMES


திருதராஷ்டிர, பாண்டுகுமாரர்கள் போர்க் கலைகளில் வல்லவர்களாகி விட்டதை அறிந்த துரோணர், பார்வையற்ற மன்னனோடு வீற்றிருந்த பீஷ்மர், கிருபர் மற்றும் குரு வம்சப் பெரியோர்களிடம் போய்.....
..கூறினார்.
குரு மன்னனே! இளவரசர்களின் குருகுலவாசம் முடிவுற்றது. நீங்கள் ஆணையிட்டால் தங்கள் திறமைகளை அவர்கள் காட்டுவார்கள்.
இதைக் கேட்டு மகிழ்ந்த மன்னன்...
உங்கள் கடமையைச் செம்மையாகச் செய்து விட்டீர்கள். வீர விளையாட்டுக்களுக்கான காலம், இடம் இவற்றை நீங்களே தேர்ந்தெடுங்கள்.
என் குழந்தைகளின் சாதனைகளைக் காண ஆவல் மேலிட்டாலும், அந்தகனான என்னால் அது இயலாது என்பதறிந்து என் இதயம் கனக்கிறது.
அறிவாளியான விதுரா! துரோணரின் விருப்பப்படி ஏற்பாடுகளைச் செய். நான் மகிழ்கிறேன்.

தகுந்த இடத்தை அளந்து மங்கள-
மான வேளையில் விழாப் பந்தலு-
க்கு அடிக்கல் நாட்டினார் துரோணர்.
அரசகுலத்தினர் அமர, அரங்குகளை
யும், பெருங்குடிமக்கள் தங்கக்
கூடாரங்களையும் சிற்பிகள் அமை
த்தார்கள்.

விளையாட்டுப் போட்டி தொடங்-
கும் நாளன்று பீஷ்மர், கிருபர்
மற்றும் மந்திரிகள் தொடர மன்-
னன் திருதராஷ்டிரன்
வந்தார்.


பிறகு காந்தாரி, குந்தி மற்றும் அரச
மகளிர் தங்கள் பரிவாரங்களுடன்
வந்தனர்.


பிறகு பல திறப்பட்ட மக்களும் அதிகாரி-களும் இளவரசர்களின் வீர விளையாட்டைக் காணும் விருப்பத்துடன் வந்து கூடவே, விரைவில் அரங்கம் நிரம்பியது.
தூய வெள்ளையாடையணிந்த துரோ-ணர் தம் மகன் அஸ்வத்தாமனுடன் வந்தார்.
விளையாட்டு அரங்கைப் புனிதப்படுத்தும் சடங்கை. துரோணர் முடித்ததும் பணி-யாளர்கள் ஆயுதங்களைச் சுமந்து வந்-தார்கள்.


இதன்பிறகு மூத்தவரான யுதிஷ்டிரனின் தலைமை
யில் இளவரசர்கள் அரங்கில் புகுந்தார்கள்
குதிரை சவாரியில் தங்கள் வல்லமை
யைக் காட்டும் போதே இளவரசர்கள் தங்
கள் பெயர் பொறிக்கப்பட்ட அம்பை இல-
க்கை நோக்கி எய்தார்கள்.
பார்வையாளர் பாராட்டினார்கள்.
பிர-மாதம்!
அற்-புதம்!

வில் வித்தை, தேரோட்டம், யானைப்போர்,
குதிரை ஏற்றம், மல்யுத்தம் -இறுதியாக
வாட்போர் இவற்றில் இளவரசர்கள்
தங்கள் திறமையைக் காட்டினார்கள்.
வாளும் கேடயமும்
கொண்டு தங்கள் உடல்
பலத்தையும், உறுதி-
யான நிலையையும்,
வலுவான பிடியையும்
வேகமான திருப்பங்-
களையும் இளவரசர்
கள் வெளிப்படுத்தி-
னார்கள்.
பிறகு, தீவிர விரோதிகளான பீமனும் துரியோதனனும் அரங்கிற்கு வந்த-
னர்.
சினங்கொண்ட யானைகளைப்போல
இருவரும் இடம் வலமாக, வலம் இடமாக,
வட்டமடித்தும் போரிட்டார்கள். விதுரன்
அவர்கள் போரிடுவதை திருதராஷ்டிரன்,
காந்தாரி, குந்தி ஆகியோருக்கு விளக்-
கினான்.


அவர்களின் போர், கூட்டத்தை இரு கட்சியாக்கிப் பாராட்டச் செய்தது.
சபாஷ், துரியோதனா!
பீமா அற்புதம்.
இதைக் கண்ட மதியூகியான துரோ-ணர் தம் மகனிடம் கூறினார்.
அவ்விரு வீரர்களின் சண்டையை நிறுத்து. இல்லாவிடில் மக்கள் மகிழ்ச்சிப் போதையில் கட்சி சார்புடையவர்-களாகி விடுவர்.
அஸ்வத்தாமன் அரங்கில் புகு-ந்து அவ்விரு வீரர்களையும் அட-க்கினான்.
பிறகு துரோணர் அரங்கிற்கு வந்து, வாத்-திய கோஷங்களை நிறுத்தச் செய்து கம்-பீரமாகக் கூறினார்.
என் மகனை விட உயர்-வான அர்ஜுனன் இதோ வருகிறான். இந்திரனின் மைந்தன். போர்க் கலை-களில் வல்லவனான இவன் மகாவிஷ்ணுவுக்கு நிகரானவன்.


இறையருள் பெற்ற அர்ஜுனன், தங்கக் கவசமணிந்து, மாலைக் கதிரவனைப் போலத் தகதகத்தபடி நின்றான். கூட்டம் மகிழ்ச்சி ஆரவாரமிட்டது.
வல்லவனை இந்திரனின் மைந்தன்.
குரு வம்சத்தை ரட்சிக்க வந்தவன்.
இவன் குந்தியின் மகன்.
பாண்டவரில் மூன்றாமவன்.
இப்புகழ்ச்சிகள் குந்தியின் கண்களில் ஆனந்தக் கண்ணீரை வரவழைத்தது. திருதராஷ்டிரன் விதுரனிடம் கேட்டான்.
இவ்வளவு கோலாகலம் ஏன்?
விதுரன் கூறினான்.
பாண்டு மைந்தன் அர்ஜுனன் அரங்கிற்கு வந்திருக்கிறான்.
திருதராஷ்டிரன் கூறினான்.
புகழ், வெற்றி, பாதுகாப்பு மூன்றையும் தரும் ஜாஜ்வல்யமான மூன்று புதல்வர்களை குந்தி அளித்திருக்கிறாள்.


கூட்டத்தினரின் மகிழ்ச்சி ஆரவாரம் அடங்கியதும், அர்ஜுனன் தன் வில் வித்தையைக் காண்பிக்கலானான்.
அக்னியாஸ்திரத்தி- னால் தீயை உண்- டாக்கி....
..வருணாஸ்திரத்- தினால் நீருற்றைத் தோற்றுவித்தான்.
வாயுவாஸ்திரத்தினால் புயல் காற்றையும் பர்ஜன்யாஸ்திரத் தினால் மேகங்களையும் உருவா- க்கினான்.
பௌமாஸ்திரத்தினால் பூமிக்குள் புகுந்து...
பர்வதாஸ்த்திரத்தி னால், மலைகளை உண்டாக்கினான்.
பிறகு அந்தர்த்யா- னாஸ்திரத்தினால் தன்னையே மறை- த்துக் கொண்டு ..


மறு விநாடியே அரங்கில் தோன்றினான்....
..அடுத்து அணு-வாகி அரங்கில் நின்றான்.
ரதத்தின் நுகத்தடியில் நின்றான்-
..பிறகு ரதத்தினுள் காட்சியளித்தான்.
அடுத்த விநாடி தரையில் நின்று கொண்டிருந்தான்.
சுழன்று கொண்டிருந்த இரும்பினலான பன்றியின் வாய்க்குள் 5 அம்புகளை அடுத்தடுத்துச் செலுத்தினான்


ஊசலாடிக் கொண்டிருந்த அம்பு-றாத் துணியிலுள், ஒரே தடவையில் 21 அம்புகளைச் செலுத்திக் காட்டி-னான்.
இதன் பிறகு, கதாயுதம், வாள் இரண்டிலும் திறமைமிக்க சாதனைகளை நிக-ழ்த்தினான்.
நிகழ்ச்சிகள் முடிவடைந்தபோது கூட்டத்தி-னரின் ஆர்வம் அடங்கிய நிலையில் - வாத்-திய இசை நின்றதும் நுழைவாசலில் இடி முழக்கமென ஆயுத ஓசை எழுந்தது. கூட்டத்தினர் திகைத்தார்கள்.
மலைகள் மோதுகின்-றனவா, பூமி பிளந்-ததா, மேகங்களின் உராய்வினால் வானம் கலகலக்கிறதா?

பார்வையாளர்களின் கவனம் நுழை-
வாசலில் திரும்பியது. இதனிடையே பாண்-
டவர்கள் துரோணரையும், கௌரவர்களும்
அஸ்வத்தாமனையும் துர்யோதனனையும் சூழ்ந்து
கொண்டார்கள்.
"வியப்பிலாழ்ந்திருந்த கூட்டம் விலகி வழி விட உடலோடு
பிறந்த கவச குண்டலங்களோடு ஒரு கையில் வில்-
லும் இடையில் வாளுமாக கர்ணன் உள்ளே
நுழைந்தான்.
பெரியதோர் மலை நகர்ந்து வருவதுபோலி
ருந்தது அவன் வருகை.
சூரியனின் அருளினால்
குந்தியின் மகனாகப் பிற-
ந்த கர்ணன், கிளை-
களில்லாத தங்க மரம்
போல, வெல்ல முடியாத
வீரனாக விளங்கினான்.

அந்த மாவீரன் அந்தக் கூட்டத்-
தைத் தன் பார்வையால் நோட்ட-
மிட்டான்.
பிறகு துரோணரையும் கிருபரையும்
வணங்கினான். குழுமியிருந்த கூட்டத்-
தினர் ஆர்வமும் வியப்பும் மேலிட நினைத்-
தார்கள்.
இவன் யாராக இருக்கும்?
சூரியனின் மைந்தன், அர்ஜுனன்,
தன் சோதரன் என்பதை அறியா-
மல் தன் இடிக்குரலில் கூறினான்.
அர்ஜுனா! நீ செய்த வித்தைகளை எண்-ணிப் பெருமைப்படாதே. நீ செய்த அத்தனையை-யும் அதை விடச் சிறப்-பாக நான் செய்து காட்டுகிறேன்.
கர்ணன் இப்படிக் கூறியதும் கூட்டத்-
தினர் பிரமிப்போடு எழுந்து நின்றனர்.
துரியோதனன் மகிழ்ந்தான். அர்ஜுனன்
வெகுண்டான்.


குரு துரோணரின் அனுமதியுடன் கர்ணன் அர்ஜுனன் செய்து காட்டிய வித்தைகள் அனைத்தையும் செய்தான்.
பரவசமடைந்த துர்யோதனன் கர்ணனை அணைத்துக்கொண்டு கூறினான்.
மாவீரனே! வருக. நீ என்னுடன் இருப்பது என் அதிர்ஷ்டம். குரு ராஜ்யமும் நானும் உன் எண்ணத்தை நிறைவேற்றக் காத்திருக்கிறோம்.
கர்ணன் கூறினான்.
என் எண்ணத்தை ஈடேறச் செய்து விட்டன உன் வார்த்தைகள். அர்ஜுனனோடு போட்டியிடவே விரும்பினேன்.
துர்யோதனன் கூறினான்.
வாழ்க்கையில் நல்லவைகளை என்னோடு அனுபவி. என் நண்பனாக இருந்து விரோதிகளை நாசம் செய்.
அவமான உணர்வுடன், மலைபோல் நிற்கும் கர்ணனைப் பார்த்துக் கூறினான் அர்ஜுனன்.
கர்ணா! போட்டியில் என்னால் கொல்லப்படப் போகிறவனே! தற்பெருமைக்காரர்களுக்கும், அத்து மீறிப் பிரவேசிப்பவர்களுக்குமான இடம் உனக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.


கர்ணன் பதிலளித்
தான்.
கோழைபோல ஏன் வார்-
த்தையாடுகிறாய்? உன்
அம்புகள் பேசட்டும். உன்
குருவின் முன்னாலேயே உன்
தலையை என் அம்புகளால்
வீழ்த்திக் காட்டுகிறேன்.
துரோணரின் ஆசியுடன்...
..சகோதரர்களின் அணை-
ப்புடன்....
..அர்ஜுனன் சண்டையிட முன்வந்தான். கர்ணன்
தன் வில்லை வளைத்து நாணேற்றினான்.

உடனே மின்னல்கள் பளீரிட, இந்திர-
னின் வானவில் ஒளி சிந்த, ஆகாயத்-
தைக் கருமேகங்கள் சூழ்ந்தன. இந்-
திரன் ஆகாயத்திலிருந்து அரங்கைப்
பாசத்தோடு நோக்கினான்.
சூரியன், மேகங்களை விலக்கி ஓடச்செய்து தன்
மகன் மீது ஒளிக் கிரணங்களை வீசினான். கர்-
ணன் தக்தகக்க, அர்ஜுனன் மேக நிழலில் மங்கிப்-
போனான்.
கர்ணனை துர்யோதனனும் அவன்
தம்பிகளும்....
அர்ஜுனனை துரோணர், கிருபர், பீஷ்மர்
ஆகியோரும்.


பெண்கள் உட்பட, கூட்டம் இருகட்சியாகியது.
உண்மை தெரிந்தவளான குந்தி மூர்ச்சையானாள்.
தாதிகளின் உதவியால் குளிர் நீரைத் தெளித்து குந்தி நினைவு பெறச் செய்தார் விதுரர்.
நினைவு வரப்பெற்ற குந்தி, சண்டைக் குணமுள்ள தன் இரு புதல்வர்களையும் பார்த்து அமைதி இழந்தாள்.

போட்டியின் விதிமுறைகளை அறிந்த கிருபர், வில்லேந்தி நிற்கும் வீரர்களைப் பார்த்தார். பிறகு கர்ணனிடம் கூறினார்.
இங்குள்ள பாண்டவன் குந்தியின் மூன்றாவது மகன். குரு வம்சத்தவன். உன்னுடன் போரிடத் தயார்... ஆனால்...
..நீ எந்த அரச வம்சத்தவன், உன் தாய் தந்தை யார் என்பதை எங்களுக்குத் தெரிவி.
அதன் பிறகே உன்னுடன் போரிடுவதா, வேண்டாமா என்பதை அர்ஜுனன் முடிவு செய்வான். இளவரசர்கள் தாழ்ந்தவர்களோடு போரிட மாட்டார்கள்.
கிருபரின் வார்த்தைகளைக் கேட்ட கர்ணன் தலை கவிழ்ந்தான்_வாடிய மலரைப் போல. துரியோதனன் கூறினான்
உயர்குடிப் பிறப்பு, வீரம், படைகளையுடையோர் இவர்கள் மன்னனாக ஆசைப்படலாம்.
அரசனாக இல்லாத ஒருவனோடு அர்ஜுனன் போரிட மாட்டான் என்றால் நான் கர்ணனை அங்க தேசத்துக்கு அரசனாக்குகிறேன்.

அக்கணமே கர்ணன் தங்க சிங்காதனத்தில்
அமரச் செய்து வேதியர்கள் மந்திரம் ஓத
அங்கதேசத்துக்கு அரசனாக மகுடாபிஷேகம்
செய்விக்கப்பட்டான். குடை பிடிக்கப்
பட்டது. மக்கள் ஆமோதித்துக் கோஷ
மிட்டார்கள்.
கர்ணன் துர்யோதனனிடம் கூறினான்:
எனக்கு ஒரு ராஜ்ய-த்தையே வழங்கிய உனக்கு நான் என்ன பரிசளிக்க முடியும்?
துர்யோதனன் கூறினான்.
உன் உறுதி-யான நட்பையே பரிசாகக் கொடு போதும்.
கர்ணன் கூறி-னான்.
ஆகட்-டும்.
நிகழ்ச்சிகளின் முடிவில் மகிழ்ச்சியோடு இரு-வரும் தழுவிக் கொண்-டார்கள்.


இவ்வேளையில் கோலூன்றியபடி உடல் தள்ளாட, அழுக்காடையுடன் அதிரதன் அங்கு வந்தான்.
அவனைக் கண்டதும் கர்ணன் ஆயுதங்களைக் கீழே வைத்து விட்டு...
மரியாதையுடன் அவன் பாதங்களில் விழுந்து வணங்கினான்.
மகனே
தேர்ப்பாகன் தன் வளர்ப்பு மகனைத் தழுவி ஆனந்தக் கண்ணீர் விட்டான்.
கர்ணன் தேர்ப்பாகனின் மகன் என்றறிந்த பீமன் இகழ்ச்சியோடு கூறினான்.
தேர்ப்பாகன் மகனே! அர்ஜுனன் கையால் மரணமடைய தகுதி இல்லை உனக்கு. சவுக்கைக் கையில் எடு. உன் பணியைச் செய்.
நீ அங்க தேசாதிபதி ஆக்கப்பட்டாலும் யாகத்தில் பலியாகும் தகுதி ஒரு இழிந்த நாய்க்குக் கிடைக்காது.

இதைக் கேட்ட கர்ணன் பெருமூச்சு விட்டான். உதடு துடிக்க வானத்துச் சூரியனை நோக்கினான்.
சினங்கொண்ட யானைபோல துரியோதனன் எழுந்து கர்ஜித்தான்.
பீமா! எப்படிப்பேசி விட்டாய்? வீரம்தான் ஒரு க்ஷத்திரியனைத் தூய்மைப்படுத்துகிறது.
நதிக்குமூலம் பார்க்கக்கூடாது. அதேபோலத்தான் வீரனின் பிறப்பும்.
நிகரற்ற வீரரான நம் துரோணர் தோன்றியது ஒரு பானையில். கிருபரோ நாணல் கட்டையில் பிறந்தவர். பாண்டவர்களே! உங்கள் பிறப்பைப் பற்றி எனக்குத் தெரியாதா என்ன?
கவச குண்டலங்களோடு பிறந்துள்ள இந்தக் கர்ணன் அங்க நாட்டுக்கு மட்டுமல்ல இந்த அவனிக்கே அரசனாகத்...
..தகுதி உடையவன்.

கர்ணனுக்கு நான் வழங்கும்
இத்தகுதிகளை ஏற்காதவர்
யாராவது இருந்தால் அவர்த
மது வில்லை வளைத்து என்
னுடன் போரிட வரட்டும்.
கூட்டத்தினர் ஒப்புதல் ஒலி எழுப்பினர். இந்நிலையில் சூரி-
யன் மறைய, துரியோதனன் கர்ணனின் கைபற்றி
அழைத்துக் கொண்டு நடந்தான். வழியெல்லாம் தீபங்-
கள் ஒளி சிந்தி நின்றன.
துரோணர், கிருபர், பீஷ்மரோடு பாண்டவர்கள் வீடு
திரும்பினார்கள். மக்களில் ஒரு பிரிவினர் அர்ஜுனனை-
யும் மற்றவர் கர்ணனையும் வெற்றி வீரர்களாக்கிய-
படி கலைந்தனர். அங்க தேசத்துக்கு முடி சூட்டப்பட்ட
கர்ணன் தன் மகன் என்பதறிந்து குந்தி உள்ளூர
மகிழ்ந்தாள். கர்ணன் சிறந்த வில்லாளி என்ற
முடிவுக்கு வந்திருந்தார் தருமர். கர்ணன் உயிர்த்
தோழனாகி விட்டதால் அர்ஜுனனால் இனி ஆபத்து
இல்லை என்று நிம்மதியடைந்தான் துரியோதனன்.

பாண்டவர்களையும் கௌரவர்களையும் போர்க்கலையில் வல்லவர்களாக்கியதும், துரோணர் தம் குருதட்சிணையைக் கேட்கும் தருணம் வந்துவிட்டதென்று ஒருநாள் கூறினார்.
என் காணிக்கையாக, பாஞ்சால மன்னன் துருபதனைப் போரில் வென்று சிறைப் பிடித்து வரவேண்டும்.
அவர் கோரிக்கையை ஏற்று அரசகுமாரர்கள் துரோணருடன் கிளம்பினார்கள்.
வழியில் பாஞ்சாலத்தின் பகுதிகளை வென்று கொண்டு
துருபதனின் நகரைச் சூழ்ந்து கொண்டனர்.
துர்யோதனையும், கர்ணன் யுயுத்ஸு முதலானோர் போருக்குத் தலைமை தாங்கப் போட்டியிடுவதைக் கண்ட அர்ஜுனன் துரோணரிடம் கூறினான்
போரில் துருபதனை இவர்களால் வெல்லமுடியாது அவர்கள் திறமையைக் காட்டி வரட்டும். பிறகு நாங்கள் போகிறோம்.
பாண்டவர்கள் கோட்டைக்கு வெளியே காத்திருந்தனர்.


மற்ற இளவரசர்கள் குதிரைப் படையைத் தொடர்ந்து
தங்கள் தேரைச் செலுத்தி, நகரில் புகுந்து வீதிகளை கலக்-
கினார்கள். பாஞ்சால மன்னன் கூச்சலைக்
கேட்டு விரோதியின் படைகளைப் பார்த்து..


தன் சோதரருடன் அரண்-
மனையிலிருந்து வெளிப்பட்-
டான்...


..வெள்ளைக் குதிரை பூட்டிய ரதத்திலிருந்தபடி, குரு ராஜகுமாரர்கள்
மீது சரமாரியாக அம்புகளைத் தொடுத்தான். துர்யோதனனும் அவன்
சகோதரர்களும் அதைத் தடுக்க முடியா-
மல் தவித்தனர்.



சிறந்த வில்லாளியான துருபதன் குரு ராஜகுமாரர்களைத் திணறச் செய்தான்.
அக்னி வளையம் போல் துருபதன், துர்யோதனன், கர்ணன் மற்றும் எல்லாரையும் தன் பாணங்களால் தடுக்கலானான்.
தனி ஒருவனாகவே துருபதன் போரிட்டான். அவன் செயல், தீரம், குரு இளவரசர்களிடையே கிலியை ஏற்படுத்தியது. பல துருபதர்கள் போரிடுவது போலிருந்தது. கூறான அம்புகள் மிகவேகமாக உக்ரமான முறையில் தாக்கின. பாஞ்சால மக்கள் வெற்றிச் சங்கு ஊதினார்கள்.
பாஞ்சால மக்கள்; முதியோர், இளைஞர் எல்லாருமே தங்கள் வில்லின் நாண் கயிற்றைச் சுண்டி, டங்கார நாதமெழுப்பி, கௌரவர் மீது பாய்ந்தனர்.
போரில் தோல்வி கண்ட கௌரவர்கள் பாண்டவர்களிடம் ஓடி வந்தார்கள்.
அவர்களுடைய தோல்வியைக் கண்ட பாண்டவர்கள் - துரோணரை வணங்கி


..தங்கள் ரதங்களில் ஏறினார்கள்

யுதிஷ்டிரனை தனியே இரு-க்கச் செய்து, நகுல சக-தேவர்களைத் தேர் ஓட்டும்-படி கூறினான். அர்ஜுனன். பீமன் கதாயுதத்தோடு முன் சென்றான்.


இப்படித் தன் சகோதரர் சூழ, அர்ஜுனன் பூமி கிடு-கிடுக்க எதிரியை நோக்கித் தேரைச் செலுத்தி-னான்.


கடல் நீரைத் திமிங்கிலம் கலக்குவது போல, பீமன் பாஞ்சாலனின் யானைப்-படையில் புகுந்து தன் கதாயுதத்தினால் அடித்து அவைகளைக் கொன்று தள்ளினான்.


இதனிடையே, அர்ஜுனன் தன் குருவை மகிழ்-
விக்க, துருபதன் மீது சரமாரியாக அம்புகளை
எய்தான்.
பாஞ்சால மன்னன், சங்கமென கர்ஜித்தபடி அர்ஜுனனை தன் முடிவில்-
லாத அம்பு மழையால் நாலா-
பக்கமும் தாக்கினான்.
அந்தப்போர் பயங்க-
ரமாக- அதிசயிக்கத்
தக்கப்படி இருந்தது.
ஓர் அம்புக்கும் மற்-
றோர் அம்புக்கும்
இடைவெளியேஇல்லை.
அப்படியொரு திற
மையை இருவரும் வெளி-
ப்படுத்தினர்.
பிறகு பாஞ்சால மன்னன், அந்-
நாளில் சாம்பரன் என்ற அரக்கன்
இந்திரனோடு போரிட்டது போல, அர்-
ஜுனனைப் பாணங்களால்மூடினான்.

அர்ஜுனன், பாஞ்சாலனின் வில்லை-
யும், கொடி மரத்தையும் உடைத்து...
..தேர்ப்பாகனையும் குதிரைகளையும்
கொன்றான்.
பாஞ்சாலன் வேறு ஒரு வில்-
லுக்காக காத்திருக்கையில்
..வாளை உருவிக் கொண்டு சிங்-
கமென கர்ஜித்தபடி தன் தேரிலி-
ருந்து குதித்து
..எதிரியின் தேரில் தாவி ஏறி...

..அவனை வளைத்துக் கொண்டான்.
இதைக்கண்ட பாஞ்சாலன் படை
ஓட்டமெடுத்தது. அர்ஜுனன் வெற்றி
கோஷமிட்டபடி...
..துருபதனுடன் திரும்பினான்.
அர்ஜுனன் வெற்றி வாகை சூடியதைக்
கண்ட இளவரசர்கள் துருபத-
னின் படைகள் மீது பாய்ந்தனர்.
அர்ஜுனன் கூறினான்:
பராக்கிரமிக்க துருபதன்
சிறைப்பட்டுவிட்டான். பீமா!
வீரர்களை வீணே கொல்-
லாதே. நாம் குருவிற்கு
தட்சிணை தருவோம்
வா.
இப்படி அர்ஜுனன்
கூறவே பீமன் திரு-
ம்பினான். அதனால்
பீமன் தன் ஆசை-
யை நிறைவேற்ற
முடியாமல் போயி-
ற்று.

பாண்டவர்கள் துரோணரிடம் பாஞ்சால மன்னன் துருபதனை ஒப்படைத்-தார்கள்.
சிறைபட்டு தன்முன் நிற்கும் துருபதனைக் கண்ட துரோண-ருக்கு அன்று அவன் அகம்பாவமுடன் பேசியது நினைவிற்கு வந்தது.
உன்னையும் உன் நாட்டையும் கைப்பற்றி விட்டேன். உன் எதிரியின் கருணைக்காக காத்திருக்கிறாய் பழைய நட்பைப் புதுப்பித்துக் கொள்ளலாமா?
புன்முறுவலுடன் துரோணரே தொடர்ந்தார்.
அந்தணன் மன்னிக்-கும் குணமுடையவன். சிறு வயதில் ஆசிரம வாழ்க்கையில் உன்மீது கொண்ட அன்பை நான் மறக்கவில்லை. மன்னனே! உன் நட்பை மீண்டும் வேண்டுகிறேன்.
உன் ராஜ்யத்தில் பாதியை என் வெகுமதியாக உனக்கு அளிக்கிறேன். ஒரு மன்னன் மன்ன-னோடுதான் நண்ப-னாக இருக்கலாம் என்பதற்காகவே உன் நாட்டை அடை-யப் போராட்-டேன்.
பாகீரதி நதியின் தென் பக்கமிருப்பதெல்லாம் உன் நாடு. வடக்குப் பகுதி என்னுடையது.

நீ விரும்பினால் நான் உன் நண்பனாக இருக்கிறேன்.

துருபதன் மனதுள் குமுறினாலும்-கூறினான்
வீரமும் நேர்மையாளருமான நீங்கள் பெருந்தன்மையுடன் நடந்து கொள்ளுவது இயற்கையே நான் என்றென்றும் உங்கள் நண்பனாகவே இருப்பேன்.


இதன் பிறகு, துருபதனுக்கு பாதி ராஜ்யத்தைக் கொடுத்து விடுதலை அளித்தார் துரோணர். மனவேதனையோடு துருபதன் தென் பாஞ்சால நாட்டை, காம்பில்யாவைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தான்.
துரோணருடைய பராக்கிரமத்தின் முன்னால் தன் க்ஷத்திரிய வீரம் ஏதும் இல்லை என்ற முடிவோடு. அவரை வெற்றிக் கொள்ளும் வல்லமை மிக்க ஒரு மகனை அடைய பூமண்டலமெங்கும் சுற்றினான் துருபதன்
அர்ஜுனனால் வெற்றி கொண்டு குருதட்சிணையாகப் பெற்ற பாஞ்சால நாட்டில் பாதியை ஆண்டு வந்தார் துரோணர்
இப்படியாக வைசம்பாயனர் கூறியபடி வியாசபகவானுடைய மகாபாரதத்தின் ஆறாவது நாள் கதை முடிவடைந்தது.

செய்திகள் வாசிப்பது

பூந்தளிர் அமர் சித்திரக்கதை

★ நெய்வேலியில் இரண்டாவது அனல் மின் நிலையத்தில், மின் விசை உற்பத்தி வரும் ஆண்டு மார்ச்சில் உற்பத்தி துவங்கும் என்று கூறப்படுகிறது. 1984—85ம் நிதி ஆண்டில் என். எல். சி. நிறுவனத்துக்கு 58கோடி ரூபாய் நிகர லாபம் கிடைத்துள்ளது.

★ ஹிமாசல பிரதேஷில் மலைக் கடியில் 9 கி. மீ. நீளமுள்ள ஒரு சுரங்கப் பாதை அமைப்பதற்கான திட்டத்தை மத்திய அரசு ஏற்றுள்ளது. 40 கோடி செலவாகும் இத் திட்டத்தினல் ஆறு மாத காலத்துக்கு பனியினல் பாதைகள் பயனற்றுப்போவதிலிருந்து நிவாரணம் கிடைக்கும். மலை ஜாதியினருக்கு இந்தச் சுரங்கப் பாதையினல் பல்வேறு வசதிகள் ஏற்படும்.

★ சில ஆண்டுகளாக நிலவி வரும் சில்லறைத் தட்டுபாடு அடுத்த ஆண்டு மத்தியில் நீங்கி விடுமாம். வெளி நாடுகளில் பல மில்லியன்களுக்கு சில்லறை நாணயங்கள் தயாரித்துத் தரும்படி ஆர்டர் அனுப்பப்பட்டிருப்பதாகவும் அவை விரைவில் வந்துவிடுமென்றும் ரிசர்வ் பாங்க் கூறுகிறது.

★ ரஜனீஷ் — என்ற சாமியார் அமெரிக்காவில் ரஜனீஷ்புரம் என்ற ஒரு நகரையே ஏற்படுத்திக் கொண்டு யோகம், தியானம் என்றெல்லாம் மேலை நாட்டவர்களை வளைத்துப் போட்டு, பெரும் பரபரப்புக்கும் பணப் புழக்கத்துக்கும் உள்ளானவர். இவருடைய அந்தரங்கக் காரியதரிசியான ஷீலா அம்மா என்பவர் பல கோடி டாலர்களைச் சுருட்டிக் கொண்டு மோசடி செய்து விட்டார். ஆகவே ரஜனீஷ் தன் அமைப்புகளைக் கலைத்து விட்டதோடு இனி தான் யோகப் பிரச்சாரம் செய்யப் போவதில்லை என்றும் அறிவித்துள்ளார்.

★ புனிதமானதும், புகழ் பெற்றதுமான கங்கா நதியைத் தூய்மைப் படுத்த 292 கோடியிலான திட்டத்துக்கு ஒப்புதல் அளித்துள்ளார் பாரத பிரதமர் ராஜீவ் காந்தி.

★ உழைப்பிற்கும் அறிவிற்கும் தொடர்ப்பில்லாத நிலை நாட்டில் உள்ளது. இந் நிலை மாறி உழைப்பும் அறிவும் இணைந்தால் தான் நாடு முன்னேறும் என்று மத்திய அரசின் முன்னள் நிதி அமைச்சர் சி. சுப்பிரமணியம் கூறி இருக்கிறர்.

★ பேய் மழை காரணமாக டாக்காவில், பல்கலைக் கழக மாணவர் விடுதி ஒன்று இடிந்து 300 மாணவர்களுக்கு மேல் உயிரிழந்தனர். 400 மாணவர்களுக்கு மேல் காய மடைந்துள்ளனர். உயிரிழந்தோர் எண்ணிக்கை உயரும் என்று அஞ்சப் படுகிறது. இவ் விடுதியில் 1200 இந்து மாணவர்கள் தங்கி யிருந்தனர்.

EDITED, PRINTED AND PUBLISHED BY DINESH V. PAI FOR POOMPATTA PUBLICATIONS
PRINTED AT PAICO PRINTING PRESS, PAICO OFFSET PRINTERS AND
POOMPATTA PUBLICATIONS—PRINTING DIVISION, COCHIN

DON'T LEAVE YOUR CHILD IDLE

PICK UP A GOOD BOOK FROM

PAICO

260, GOLDEN TOWERS,
ROYAPETTAH HIGH ROAD,
MADRAS-600 014

152, ANNA ROAD,
MADRAS-600 002
Phone: 811350

Regd No: R N 36195/84
1986 January 10
Poontalir
AMAR CHITRA KATHA
TN/MS (c) 744
Price : Rs. 1.50